**BHARATHIDASAN UNIVERSITY**
**Tiruchirappalli – 620 024**

***Press Release***

**ANTI-DRUG AWARENESS PROGRAMME ON DRUG ABUSE**

The Anti-Drugs Committee, Bharathidasan University organized a BECH–RUSA 2.0-sponsored Awareness Programme on Drug Abuse on September 24, 2025, at 10:30 a.m. in the A/C Auditorium, Bharathidasan University, Tiruchirappalli.

The programme commenced with a welcome address by Dr. A. Antony Joseph Velanganni, Coordinator, Anti-Drugs Committee. Dr. V. Rajesh Kannan, Member, Vice-Chancellor Committee & Syndicate Member delivered the presidential address and the session was formally inaugurated by Dr. R. Kalidasan, Registrar (i/c), Bharathidasan University.

The invited guest speakers, Dr. A. Veni, MD, DM (Neuro), Rockfort Neuro Centre, Tiruchirappalli, who highlighted the neurological and health impacts of drug abuse and stressed the importance of adopting a drug-free lifestyle among students, followed by Psychologist Ms.Sowmithra from Prana rehabilitation center described the health and psychological aspects of drug abuse, highlighting its impact on mental well-being, emotional stability, and overall quality of life. Dr. A. Gnanasekar, M.Sc., M.Phil., Ph.D., Inspector of Police, Prohibition Enforcement Wing, Thiruverumbur, Tiruchirappalli, who explained about the legal consequences of drug abuse, enforcement strategies to curb drug-related crimes, and urged students to remain vigilant and responsible in building a drug-free society.

The programme emphasized both the health hazards and social consequences of drug abuse, motivating students to pursue positive life goals and focus on education. The event witnessed the participation of over 300 students from various disciplines of the post graduate programme of Bharathidasan University.

At the conclusion, all participants took a pledge against drug abuse, reaffirming their commitment to “Say YES to Life, NO to Drugs.” The programme ended with a vote of thanks by Dr. T. Sivasudha, Member, Anti-Drugs Committee, followed by the National Anthem.

**REGISTRAR (FAC)**

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
## திருச்சிராப்பள்ளி – 620 024

*செய்திக் குறிப்பு*

**போதைப்பொருள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி (24.09.2025)**

போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது செப்டம்பர் 24, 2025 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழக குளிர்மை அரங்கில் காலை 10.30 மணியளவில் இனிதே துவங்கியது. போதைப்பொருள் எதிர்ப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் A. அந்தோணி ஜோசப் வேளாங்கண்ணி வரவேற்புரையாற்றினார். மேலும், அவர் போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான கூட்டு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கூட்டமைப்பு குழுவின் உறுப்பினரான பேராசிரியர் V. ராஜேஷ் கண்ணன், பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் R. காளிதாசன் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்புக் குழு உறுப்பினர்கள் முனைவர் M. அனுசுயாதேவி ஜெயச்சந்திரன், முனைவர் T. சிவசுதா, ஆகியோர் இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளி தில்லை நகரில் இயங்கிவரும் ராக்ஃபோர்ட் நியூரோ மையத்தின் நிர்வாக இயக்குனர் மருத்துவர் A. வேணி எம்.டி., டி.எம் (நியூரோ), சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் நரம்பியல் மற்றும் உடல்நல பாதிப்புகளை எடுத்துரைத்து, மாணவர்களிடையே போதைப்பொருள் இல்லாத வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அதைத் தொடர்ந்து திருச்சி பிராணா மறுவாழ்வு மையத்தைச் சேர்ந்த உளவியலாளர் செல்வி. சௌமித்ரா உரையாற்றும்போது போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் உடல்நலம் மற்றும் உளவியல் அம்சங்களை விவரித்தார், மேலும் மன நலம், உணர்ச்சி நிலைத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தில் அதன் தாக்கத்தை எடுத்துரைத்தார்.

திருவெறும்பூர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு. A. ஞானசேகர் அவர்கள் உரையாற்றும்போது போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் சட்ட விளைவுகள், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான உத்திகள் குறித்து எடுத்துரைத்தார். போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதில் மாணவர்கள் விழிப்புடனும் பொறுப்புடனும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்த நிகழ்வில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின் இறுதியில், அனைத்து பங்கேற்பாளர்களும் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர், "வாழ்க்கை வேண்டும், போதைப்பொருள் வேண்டாம்" என்ற தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர். போதைப்பொருள் எதிர்ப்புக் குழு உறுப்பினர் முனைவர் T. சிவசுதா அவர்கள் நன்றி உரையாற்ற, அதைத் தொடர்ந்து தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

**பதிவாளர்** (மு.கூ.பொ.)